பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்

# வழிகாட்டி

“நற்காரியத்திற்கும் இறையச்சத்துக்கும் உதவியாக இருங்கள்
பாவத்துக்கும் பகைமைக்கும் உதவியாக இருக்காதீர்கள்” (அல்குர்ஆன் 5:2)

இதழ் : 14 | றஜப் - 1433 | மே - 2012

# புஹாரி மஜ்லிஸ் : ஓர் இஸ்லாமியப் பார்வை

அல்லாஹ்வின் இறுதி வேதமான அல்குர்ஆனுக்கு அடுத்து மிகவும் நம்பகமான நபிகளாரின் பொன்மொழிகளை உள்ளடக்கிய ஒரு ஹதீஸ் நூல் இருக்குமெனில் அது இமாம் புஹாரி றஹிமஹுல்லாஹ் அவர்களின் ஸஹீஹுல் புஹாரி என்ற நூல்தான் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான ஹதீஸ்களை அவற்றின் அறிவிப்பாளர் வரிசையோடு மனனமாகக் கூறுகின்ற மிகப் பெரும் ஞாபக சக்தியைப் பேருளாகப் பெற்றிருந்த ‘ஹதீஸ்கலையில் மு.ஃமின்களின் தலைவர்’ என வர்ணிக்கப்படும் இமாம் முஹம்மத் இப்னு இஸ்மாஈல் அல்புஹாரி றஹிமஹுல்லாஹ் அவர்கள், சுமார் 16 ஆண்டுகள் இடையறாது மேற்கொண்ட பெருமுயற்சியின் பயனாக ஸஹீஹுல் புஹாரி என்ற ஹதீஸ் நூலை தொகுத்து வெளியிட்டார்கள்.

தொகுக்கப்பட்ட நூல்களோ, நவீன போக்குவரத்து வசதிகளோ அற்ற ஹி. 3ம் நூற்றாண்டில் ஹதீஸ்களை சேகரிப்பதற்காகவும், சேகரித்த ஹதீஸ்களைப் பகுப்பாய்வு செய்து, ஆதாரபூர்வமான ஹதீஸ்களையும் போலி ஹதீஸ்களையும் தரம் பிரித்து மிகவும் ஆதாரபூர்வமான ஹதீஸ்களை மாத்திரம் தனது நூலில் உள்ளடக்குவதற்காகவும் இமாம் அவர்கள் மேற்கொண்ட தியாகங்களும் சந்தித்த சிரமங்களும் கண்ணீரை வரவழைப்பவையாகும்.

அவர்களது கலப்பற்ற பேணுதல், வுழு செய்து இரண்டு றக்அத் ஸுன்னத் தொழுது அல்லாஹ்விடம் பிரார்த்தனை செய்த பின்பே தனது நூலிலுள்ள ஒவ்வொரு ஹதீஸையும் எழுதுகின்ற அவர்களது தொடரான நடைமுறை, போலி ஹதீஸ்களைத் தவிர்த்து நபியவர்களின் உண்மையான ஹதீஸ்களை மாத்திரம் எழுத வேண்டும், இல்லையேல் தான் அல்லாஹ்விடம் தப்பிக்க முடியாது என்ற இறையச்சம் என்பவையே அவர்களது நூல் சுமார் 12 ஹிஜ்ரி நூற்றாண்டுகள் கடந்த பின்பும் இன்றும் உயிர் வாழ்வதற்குக் காரணமாகும்.

இத்தகையதொரு புனிதமான நூல் இன்று சமூகத்தில் எந்த நிலையில் வைத்து நோக்கப்படுகிறது என்பது அலசப்பட வேண்டியதொன்றாகும். ஸஹீஹுல் புஹாரி என்ற நூலை மக்கள் வாசித்தறிந்து அதிலுள்ள நபிகளாரின் பொன்மொழிகளை வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இமாம் புஹாரி அவர்களின் ஒரே குறிக்கோளாக இருந்தது. ஆனால் இன்று அந்த நூல் புஹாரி மஜ்லிஸ் என்ற பெயரில் பள்ளிவாசல் வருமானத்திற்காக அல்லது தனிநபர்களின் வருமானத்திற்காக பொருளறியாது மந்திரம் போல் முணுமுணுக்கப்படுகின்ற ஒன்றாக மாறியிருப்பது ஈமானிய உணர்வுள்ள அனைவருக்கும் மிகப் பெரும் கவலை தரும் விடயமாகும்.

‘வருமானம் இல்லையேல் புஹாரி மஜ்லிஸும் இல்லை’ என்னும் அளவுக்கு நிலைமை மாறியிருக்கிறது. பள்ளிவாசலுக்குரிய வருமானத்தையோ, புஹாரி ‘ஓதுகின்ற’ நபர்களுக்குரிய வருமானத்தையோ, நார்சாக்களையோ நிறுத்திவிட்டால் எந்தப் பள்ளிவாசலிலாவது புஹாரி மஜ்லிஸ் நடைபெறுமா என்ற கேள்வியை எழுப்பிப் பார்த்தால், இதை நடத்துவதன் நோக்கம் புரிந்துவிடும்.

புஹாரி மஜ்லிஸின் மூலம் தங்களுக்குத்தான் வருமானம் அதிகம் என்று அதிக வருமானம் பெறும் பள்ளிவாசல் நிருவாகத்தினர் பெருமையோடு கூறிக்கொள்கின்றனர். குறைந்த வருமானம் பெறும் பள்ளிவாசல்கள் அடுத்த முறை மற்ற பள்ளிவாசல்களை விட அதிக வருமானத்தை ஈட்ட வேண்டும் என்று உறுதி எடுத்துக்கொள்கின்றனர். மிகப் புனிதமான நோக்கத்தோடு எழுதப்பட்ட, மிகமிகப் புனிதமான நபிகளாரின் பொன்மொழிகளை உள்ளடக்கிய நபிமொழிப் பேழையான ஸஹீஹுல் புஹாரிக்கு ஏன் இந்த அவல நிலை நேர வேண்டும்? அற்பக் கிரயத்திற்காக மார்க்கத்தை விற்கும் காலம் உருவாகும் என்ற நபிகளாரின் எச்சரிக்கை நிதர்சனமாகிக் கொண்டிருக்கிறதா?

இது இவ்வாறிருக்க, புஹாரி மஜ்லிஸையொட்டி இன்னும் பல மார்க்கத்துக்கு முரணான காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**1. ஷிர்க்குடன் இணைந்த நேர்ச்சை**
நேர்ச்சை என்பது உள்ளம் சார்ந்த வணக்கங்களுள் ஒன்று என இஸ்லாம் அடையாளப்படுத்துகிறது. ஆகவே, நேர்ச்சை என்பது அல்லாஹுவுக்கு மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும்.

தொழுகை, நோன்பு என்பன உடலால் செய்யப்படும் வணக்கங்களாகும். ஸகாத் என்பது பொருளாதாரத்தால் செய்யப்படும் ஒரு வணக்கமாகும். ஹஜ் என்பது பொருளாதாரத்தாலும் உடலாலும் நிறைவேற்றப்படும் வணக்கமாகும். இவ்வாறே நேர்ச்சை என்பது உள்ளத்துடன் தொடர்பான ஒரு வணக்கமாகும். தொழுகையையும் ஏனைய

## அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தீர்ப்பு

புஹாரி வாசித்தல் சம்பந்தமாக 29.04.2009 திகதியிடப்பட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தலைவர் அஷ்ஷெய்ஹ் எம்.ஐ.எம். றிஸ்வி முப்தி, செயலாளர் அஷ்ஷெய்ஹ் எச். அப்துல் நாஸர், பத்வாக் குழுச் செயலாளர் டப்ளியூ. தீனுல் ஹஸன் ஆகியோர் ஒப்பமிட்டு வெளியிட்ட புஹாரி வாசித்தல் சம்பந்தமான தீர்ப்பிலிருந்து...

**“ஹதீஸ்களை வாசித்து விளங்கி அதன் பிரகாரம் அமல் செய்வது இபாதத்தாகும். ஆனால் அதை சில குறிப்பிட்ட நாட்களில் பறக்கத்திற்காக வாசிப்பது பிறகு அதை விட்டுவிடுவது அல்லது அதிலுள்ள நபிமொழிகளின் அர்த்தத்தையும், விளக்கத்தையும் படிக்காமல் புரியாமல் பாராயணம் செய்வது என்பன கண்ணியமான ஹதீஸ் விடயத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய முறையான செயல்களல்ல”**

வணக்கங்களையும் அல்லாஹ்வுடைய பெயரில், அல்லாஹ்வுக்காக என்று நிறைவேற்றுவது போன்று நேர்ச்சை என்ற வணக்கத்தையும் அல்லாஹ்வின் பெயரில் அல்லாஹ்வுக்கு என்றே நிறைவேற்ற வேண்டும்.

உதாரணமாக, ஒருவர் தனக்கு ஒரு தேவை நிறைவேறினால், அல்லது நோய் குணமாகினால் அல்லாஹ்வுக்காக இரு நோன்புகள் நோற்பேன் என்றோ, இரண்டு றக்அத் தொழுவேன் என்றோ நேர்ச்சை செய்யலாம். அவரது தேவை நிறைவேறினால் அல்லது நோய் குணமாகினால் அவரது நேர்ச்சையை நிறைவேற்றி விடவேண்டும். இதுதான் இஸ்லாம் கூறும் நேர்ச்சை முறையாகும்.

ஆனால் நமது பிரதேசத்திலுள்ள சிலர் புஹாரி மஜ்லிஸுக்கு என்றும் புஹாரி இமாமுக்கு என்றும் (மற்றும் சிலர், கடற்கரைப்பள்ளி, ஜெய்லானி, மனாகிப், ஹத்தாத் றாதிப் என்றெல்லாம்) நேர்ச்சை வைத்து புஹாரி மஜ்லிஸ் நடைபெறும் காலம் வரை காத்திருந்து தமது பொருட்களை ஒப்படைக்கின்றனர். இது நாம் அல்லாஹ்வுக்கு செய்ய வேண்டிய நேர்ச்சை என்ற வணக்கத்தை அல்லாஹ் தவிர்ந்த வேறு ஒருவருக்கு அல்லது வேறு ஒன்றுக்கு செய்கின்ற பெரும் பாவச் செயலாகும். இவ்வுலகில் தோன்றிய மிகப் பெரும் ஹதீஸ்கலை மேதையான புஹாரி இமாம் அவர்கள் தன் பெயரில் நேர்ச்சை செய்ய வேண்டும் என்று ஒரு போதும் குறிப்பிடவில்லை. ஒரு போதும் அவ்வாறு கூறவும் மாட்டார்கள்.

புஹாரி மஜ்லிஸ் ஆரம்பமாகி விட்டால் பல ஆண்களும் பெண்களும் நன்மை செய்வதாக நினைத்து நேர்ச்சை என்ற வணக்கத்தை பிழையான முறையில் நிறைவேற்றுகின்றனர். தனவந்தர்கள் நன்மை கிடைக்கும் என்று நார்சாக்களை வாரி வழங்குகின்றார்கள். "நாம் பள்ளிவாசலுக்குத்தான் கொடுக்கிறோம், பள்ளிவாசலுக்கு கொடுப்பது கூடாதா?" என்று கேட்டு, சிலர் தமது செயலை நியாயப்படுத்துகின்றனர். இது உண்மையை திசைதிருப்பிவிடுகின்ற வாதமாகும்.

பள்ளிவாசலுக்கு கொடுப்பதை யாரும் பிழையென்று கூறவில்லை. பள்ளிவாசலுக்கு கொடுப்பதற்கென்றே தனியான நன்மைகள் உள்ளன. உண்மையில் பள்ளிவாசலுக்கு கொடுக்கும் எண்ணம் இருந்தால், புஹாரி மஜ்லிஸ் நடைபெறும் காலம் வரை ஏன் காத்திருக்க வேண்டும்? எப்போதும் கொடுக்கலாமே? எனவே புஹாரிக்கான நேர்ச்சையை நிறைவேற்றுதல் என்பதுதான் இத்தகையோரின் உண்மையான நோக்கமாகும் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. இவ்வாறு புஹாரியின் பெயரில் நேர்ச்சை வைத்துக் கொடுப்பதைத்தான் ஷிர்க்குடன் இணைந்த நேர்ச்சை என்று குறிப்பிடுகிறோம். பெயரை நாம் அழகாக வைத்துக்கொண்டால் ஒரு பிழையான செயல் ஒருபோதும் சரியாகி விடாது. நாம் செய்யும் அமல்கள் அனைத்தையும் அழித்து நாசமாக்கிவிடக் கூடிய எவ் வகையான இணைவைத்தலாயினும், அதன் பக்கம் நாம் நெருங்கியும் விடக்கூடாது.

**2. பள்ளிவாசலில் வியாபாரம்**

புஹாரி மஜ்லிஸில் இடம்பெறுகின்ற மார்க்கத்துக்கு முரணான மற்றுமொரு செயற்பாடு பள்ளிவாயலில் வியாபாரம் செய்வதாகும். பள்ளிவாயல்களில் பொருட்களை விற்பதும் வாங்குவதும் முற்றாக தடை செய்யப்பட்ட ஒரு பாவச் செயலாகும். நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்: "பள்ளிவாயலில் விற்கக் கூடிய அல்லது வாங்கக் கூடிய ஒருவரைக் கண்டால் "உனது வியாபாரத்தில் அல்லாஹ் இலாபம் தராமல் விடுவானாக" என்று கூறிவிடுங்கள்"(ஆதாரம்: திர்மிதி, நஸாஈ)

புஹாரி மஜ்லிஸ் நடைபெறும் பள்ளிவாயல்களில் ஆடு, கோழி, தேங்காய், உப்பு, தென்னை மரம் போன்ற இன்னும் பல பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் முற்றாகத் தடுத்த ஒரு விடயம் அல்லாஹ்வின் மாளிகைக்குள் மிகப் பகிரங்கமாக அரங்கேறுவதை எவ்வாறு நாம் அனுமதிக்க முடியும்?

**3. ஹதீஸ்களை பிழையாக வாசித்தல்**

புஹாரி மஜ்லிஸில் ஹதீஸ்களை வாசிக்கும் பலர் மிகப் பிழையாக வாசிக்கின்றனர். ஏன் இப்படியொரு அவலம் ஏற்பட வேண்டும்? அத்தோடு 'ஹதீஸ்கள் என்பவை அல்குர்ஆனைப் போன்று ஓதப்படக் கூடியவையல்ல. அவ்வாறு பொருள் விளங்காமல் ஓதுவதால் நன்மையும் கிடைக்காது.
அவை விளங்கி பின்பற்றப்பட வேண்டியவை. ஹதீஸ் என்றாலே 'ஓதப்படாத வஹி' (வஹி கைரு மத்லுவ்) என்றுதான் குறிப்பிடப்படும். அல்குர்ஆன் 'ஓதப்படும் வஹி' (வஹி மத்லுவ்) ஆகும். க.பொ.த உயர்தரத்தில் இஸ்லாம் பாடம் கற்கும் மாணவர்கள் கூட இதை அறிந்திருக்கிறார்கள். எனவே பொருள் விளங்கி ஓதினாலும் விளங்காமல் ஓதினாலும் நன்மை கிடைப்பது அல்குர்ஆனுக்கு மாத்திரம்தான்.

அல்குர்ஆனை ஓதத்தெரியாதவர்கள் சமூகத்தில் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். புஹாரி வாசிக்கும் நேரங்களில் அவர்களுக்கு அல்குர்ஆனை ஓதக் கற்றுக்கொடுத்தால் எவ்வளவோ நன்மைகள் கிடைக்கும். அல்லது அல்குர்ஆன் ஓதுவது போன்று தப்பும் தவறுமாக புஹாரி ஓதுவதையும் அதே தவறுகளை ஒலிபெருக்கியில் ஊர் முழுக்கப் பரப்புவதையும் தவிர்த்து வருமானத்தையோ, நார்சாக்களையோ எதிர்பார்க்காமல் ஒவ்வொரு நாளும் (றஜப் மாதம் மட்டுமல்ல) இரண்டு ஹதீஸ்களையேனும் வாசித்து அதன் விளக்கத்தை மக்களுக்கு எடுத்துக்கூறினால் மிகமிகப் பயனுள்ளதாக அமையும். இமாம் புஹாரி அவர்களின் நோக்கமும் நிறைவேறும். பள்ளிவாசல் நிருவாகத்தினரும் உலமாக்களும் இதை செயற்படுத்த முன்வருவார்களா?

## I.L.A. ஜுனைத் ஆலிம்

ஏறாவூரின் மூத்த ஆலிமாகத் திகழ்ந்த I.L.A. ஜுனைத் ஆலிம் அவர்கள் கடந்த 10.05.2102 அன்று மரணமடைந்தார்கள். 1921ம் ஆண்டு பிறந்து நீண்ட காலம் வாழ்ந்த அன்னாரது உயிரை அல்லாஹ் அவரது 91வது வயதில் கைப்பற்றிக்கொண்டான்.

காலி மத்ரஸதுல் பஹ்ஜதில் இப்றாஹிமிய்யா அறபுக்கல்லூரியில் தனது மார்க்கக் கல்வியைக் கற்றுத் தேறிய ஜுனைத் ஆலிம் அவர்கள் அறபுக் கல்லூரி அதிபராக, போதனாசிரியராக, பாடசாலை ஆசிரியராக, பேஷ் இமாமாக பல்வேறு தளங்களில் நீண்ட காலம் பணியாற்றி, பன்முக ஆளுமையாக திகழ்ந்தவர்.

தான் ஒரு பாரம்பரிய அறபுக் கல்லூரியில் கல்வி கற்ற போதிலும் அங்கு கற்றவைகளோடு மாத்திரம் தனது அறிவை சுருக்கிக்கொள்ளாது, அகீதா, தப்ஸீர், ஹதீஸ், பிக்ஹ் துறைசார் பல்வேறு அறபு நூல்களை வாசித்து தனது அறிவை விசாலப்படுத்திக்கொள்வதில் அவர் என்றும் ஆர்வத்தோடும் ஈடுபாட்டோடும் இருந்ததன் மூலம் ஏனைய உலமாக்களுக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார். அவரைச் சந்திக்கச் செல்லும் போதெல்லாம் பெரும்பாலும் ஏதாவது அறபு நூல் ஒன்றை வாசித்துக்கொண்டிருப்பார். மரணிப்பதற்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்பு ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத்தைச் சேர்ந்த சில உலமாக்கள் அவரை நோய் விசாரிக்கச் சென்ற போது தனது இயலாமை, நோய் அனைத்தையும் மறந்து தனக்கு வாசிப்பதற்கு அறபு நூல் ஒன்று கொண்டுவந்து தருமாறு கோரிய போது நாம் மெய்சிலிர்த்துப் போனோம்.

தனது இறுதிக் காலத்தில் ஜுனைத் ஆலிம் அவர்கள் ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத்தின் தர்பியா நிகழ்வுகளிலும் மார்க்கச் சொற்பொழிவுகளிலும் பங்கெடுத்துக்கொண்டார். மிகுந்த சிரமத்திற்கு மத்தியில் பிறரின் துணையோடு ஜும்ஆத் தொழுகைக்காக ஏறாவூர் தவ்ஹீத் ஜும்ஆப் பள்ளிவாயலுக்கு தவறாது இறுதி வரை வருகை தந்துகொண்டிருந்தார். அல்குர்ஆன், ஹதீஸுக்கு முரணான ஊர்ப் பாரம்பரியங்களை விட்டொதுக்கி, அல்குர்ஆன், ஹதீஸிலுள்ளவற்றை மக்களுக்கு துணிந்து எடுத்துக்கூற வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவது இன்றும் நினைவில் நிற்கிறது.

வல்ல அல்லாஹ் அவனது மார்க்கத்துக்காக ஜுனைத் ஆலிம் அவர்கள் ஆற்றிய பணிகளை அங்கீகரித்து, அவரது குறைகளை மன்னித்து சுவன வாழ்வை வழங்குவானாக.

# நபி வழியில் நம் தொழுகை

-ஹாபிழ் ARM. றிஸ்வான்-

- தொடர் 06

**(தொடர் 05ல் பார்வையைத் தாழ்த்தி உள்ளச்சத்தோடு தொழுதல், ஆரம்ப துஆ ஓதுதல் ஆகியன பற்றி கலந்துரையாடப்பட்டது)**

## 9) ஸுரதுல் பாதிஹா ஓதுதல்

இமாம், ம.்.மூம், தனியாகத் தொழுபவர் அனைவரும் தொழுகையின் அனைத்து றக்அத்துகளிலும் ஸுரதுல் பாதிஹாவை அஊது, பிஸ்மியுடன் ஓதிக் கொள்ள வேண்டும்.

'தொழுகையில் ஸுரதுல் பாதிஹா ஓதாதவருக்கு தொழுகையே இல்லை'(புஹாரி , முஸ்லிம்)

* ஆயினும் சத்தமிட்டு ஓதித் தொழும் தொழுகைகளில் (உ-ம் : ம.்.ரிப், இஷா, ஸுப்ஹ், ஜும்ஆ) அஊது, பிஸ்மியை இமாம் சத்தமிட்டு ஓதாமல் இரகசியமாக ஓதுவதே நபிவழியாகும்.

அனஸ் றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: 'நான் நபியவர்களுக்குப் பின்னாலும் அபூபக்ர், உமர், உஸ்மான் (றழியல்லாஹுஅன்ஹும்) ஆகியோருக்குப் பின்னாலும் நின்று தொழுதுள்ளேன். அவர்கள் அனைவரும் 'அல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்' என்றே ஆரம்பிப்பார்கள். ஆரம்பத்திலோ, இறுதியிலோ பிஸ்மியை ஓத மாட்டார்கள்' (புஹாரி, முஸ்லிம்). மற்றும் சில ஹதீஸ் அறிவிப்புகளின்படி, 'நபியவர்கள் பிஸ்மியை சத்தமிட்டு ஓதமாட்டார்கள், இரகசியமாக ஓதுவார்கள்' (இப்னு ஹுஸைமா, தபரானி).



அப்துல்லாஹ் இப்னுல் முஹப்பல் றழியல்லாஹுஅன்ஹுஅவர்களின் மகன் ஒரு தடவை தொழுகையில் பிஸ்மியை சத்தமிட்டுக் கூறினார். அதற்கு அப்துல்லாஹ் இப்னுல் முஹப்பல் அவர்கள் தனது மகனிடம் 'மகனே! உன்னை நான் எச்சரிக்கிறேன். நபியவர்களின் தோழர்களில் யாரும் இவ்வாறு பிஸ்மியை சத்தமிட்டு ஓதியதை நான் பார்த்ததில்லை. இஸ்லாத்தில் புதிதாக ஒரு விடயம் உருவாக்கப்பட்டால் நபியவர்கள் கடுமையாக கோபப்படுபவர்களாக இருந்தார்கள். நான் நபியவர்களுடனும் அபூபக்ர், உமர், உஸ்மான் (றழியல்லாஹுஅன்ஹும்) ஆகியோருடனும் தொழுதிருக்கிறேன். அவர்களில் யாரும் பிஸ்மியை (சத்தமிட்டு) கூறியதை நான் கண்டதில்லை, நீயும் கூற வேண்டாம். நீ ஓத ஆரம்பித்தால் அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன் என்றே தொடங்கு' என்று கூறினார்கள் (அஹ்மத்). இவை போன்று இன்னும் பல ஹதீஸ் பிஸ்மியை சத்தமிட்டே ஓத வேண்டும் என்று கூறுவோர் ஒரு பலவீனமான ஹதீஸை ஆதாரமாகக் காட்டுகின்றனர். ஆனால் சத்தமிட்டு ஓதமாட்டார்கள் என்று வரக் கூடிய மேலுள்ள ஹதீஸ் புஹாரி, முஸ்லிமில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆதாரப்பூர்வமான ஹதீஸாகும். ஆதாரப்பூர்வமான ஹதீஸ் இருக்கும் போது பலவீனமான ஹதீஸை ஒரு போதும் ஆதாரமாக எடுக்க முடியாது என்பது ஹதீஸ்கலையின் அடிப்படை விதிகளுள் ஒன்றாகும்.

* சில அறிஞர்கள் சத்தமிட்டு ஓதித் தொழும் தொழுகைகளில் (உ-ம் : ம.்.ரிப், இஷா, ஸுப்ஹ்) ம.்.மூம்கள் ஸுரதுல் பாதிஹா ஓத தேவையில்லை என்றும் இமாம் ஓதுவதே ம.்.மூம்களுக்குப் போதுமானது என்றும் குறிப்பிடுகின்றனர். இதற்கு பின்வரும் ஹதீஸை ஆதாரமாகக் காட்டுகின்றனர்.

'யார் இமாமைப் பின்பற்றுகின்றாரோ அந்த இமாமுடைய ஓதலே ம.்.மூமுக்குப் போதுமானதாகும்' (தாரகுத்னீ, இப்னுமாஜஹ்). ஆயினும் இந்த ஹதீஸ் 'முர்ஸல்' 'என்ற தரத்தை சேர்ந்த பலவீனமான ஹதீஸாகும் என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். எனவே, அனைத்துத் தொழுகைகளிலும் இமாம் ஸுறா பாதிஹாவை ஓதி முடித்த பின் ம.்.மூம்கள் ஸுறா பாதிஹா ஓத வேண்டும். நபியவர்கள் கூறினார்கள்: 'யார் ஸுறா பாதிஹாவை ஓதவில்லையோ அவருக்கு தொழுகையே இல்லை' (புஹாரி, திர்மிதி).

* எனினும் பிந்தி வந்து ஜமாஅத் தொழுகையில் சேர்பவர் (மஸ்பூக்) அவர் வந்து சேர்ந்த றக்அத்தில் ஸுறா பாதிஹா ஓதத் தேவையில்லை. ஆயினும் அடுத்து வரும் றக்அத்துகளில் ஸுறா பாதிஹாவை ஓதிக்கொள்ள வேண்டும். உதாரணமாக, ழுஹர் தொழுகை ஜமாஅத்தாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது ஒருவர் இமாம் றுகூஉக்குச் செல்வதற்கு சற்று முன் வந்து சேர்ந்தால் அல்லது இமாம் றுகூஉவில் இருக்கும் போது இமாமுடன் சேர்ந்து கொண்டால் அந்த றக்அத்தில் ஸுறா பாதிஹா ஓதத் தேவையில்லை. ஆயினும் அடுத்து வருகின்ற இரண்டாவது, மூன்றாவது, நான்காவது றக்அத்துகளில் ஸுறா பாதிஹா ஓத வேண்டும்.

ஒரு தடவை அபூபக்ரா அத்தகபீ றழியல்லாஹுஅன்ஹு அவர்கள் நபியவர்கள் றுகூஉவில் இருந்த போது விரைவாக வந்து றுகூஉவை அடைந்து கொண்டார். (ஸுறா பாதிஹாவை அவர் ஓதவில்லை) தொழுது முடித்த பின் நபியவர்கள் (அவர் ஸுறா பாதிஹாவை ஓதாமலிருந்தும்) அந்த றக்அத்தை மீண்டும் தொழச் சொல்லவில்லை (புஹாரி).

*சத்தமிட்டு தொழும் தொழுகைகளில் ஸுறா பாதிஹாவை இமாம் ஓதி முடித்ததும் இமாமும், ம.்.மூம்களும் ஒன்றாக சத்தமிட்டு ஆமீன் சொல்ல வேண்டும்.

-நபியவர்கள் ஸுறா பாதிஹாவை ஓதி முடித்தால் 'ஆமீன்' என்று சத்தமிட்டும் நீட்டியும் சொல்வார்கள் (புஹாரி).

-நபியவர்கள் கூறினார்கள் : 'நீங்கள் ஸலாம் சொல்வதையும் ஆமீன் கூறுவதையும் பார்த்து யூதர்கள் பொறாமைப்படுவது போன்று வேறு எதற்கும் பொறாமைப்படுவதில்லை' (இப்னுமாஜா, முஸ்னத் அஹ்மத்)

சிலர் இந்த ஹதீஸை கூறி தொழுகைக்குப் பின் ஓதப்படுகின்ற, நபியவர்களோ ஸஹாபாக்களோ தொழுகைக்குப் பின் ஒருபோதும் ஓதாத கூட்டு துஆவை நியாயப்படுத்துகின்றனர். ஆனால் மேலுள்ள ஹதீஸ் ஸுறா பாதிஹாவுக்குப் பின் சத்தமாக அனைவரும் சேர்ந்து ஆமீன் கூறுவதைப் பார்த்து யூதர்கள் பொறாமைப்படுவதையே குறிப்பிடுகிறது. ஒரு ஹதீஸுக்கு அதன் உண்மைக் கருத்தை கூறாமல் மாற்று விளக்கம் வழங்குவது மிகப் பெரும் தவறாகும்.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்...

# துஆவின் முக்கியத்துவமும் கூட்டு துஆ பற்றிய ஓர் இஸ்லாமியப் பார்வையும்

**- அபூ ஸைனப்**

(தொடர் 01ல் துஆ கேட்பதன் முக்கியத்துவம் பற்றி அலசப்பட்டது)

நபிகளார் ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் மூலமாக அல்லாஹ் நமக்கு தந்திருக்கும் இஸ்லாம் மார்க்கத்தை அல்லாஹ்வும் அவனது தூதரும் நமக்கு அறிமுகப்படுத்தியவாறு பின்பற்றுவதுதான் ஒவ்வொரு முஸ்லிமான ஆண், பெண்ணின் மீதும் கடமையாகும். நமது பார்வையிலும் சிந்தனையிலும் நல்லதாகவும் சிறந்ததாகவும் தோன்றும் விடயங்கள் மார்க்கமாகி விட முடியாது. ஒவ்வொருவரினதும் சிந்தனைகளும் பார்வைகளும் வெவ்வேறுபட்டவை என்பதால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விடயம் நல்லதாகத் தோன்றும். அவரவர்க்கு நல்லதாகத் தோன்றுபவற்றையெல்லாம் மார்க்கமாக ஏற்றுக்கொண்டால் இந்த மார்க்கத்திற்கென்று ஒரு வரையறை இல்லாமற் போய்விடும்.

மார்க்கத்தில் ஒவ்வொரு வணக்கத்திற்கும் வரையறைகளும் கட்டுப்பாடுகளும் உள்ளன. அவ் வரையறைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டு வணக்கங்களை நிறைவேற்றும் போதுதான் அது அல்லாஹ்வினால் ஏற்றுக்கொள்ளப்படும். இல்லையெனில் மறுமையில் அவை நிராகரிக்கப்பட்டு விடும்.

இதனைத்தான் நபியவர்கள் பின்வருமாறு கூறினார்கள்: ‘நமது (நபியின்) கட்டளையில்லாமல் யார் ஒரு அமலைச் செய்கிறாரோ அது (அல்லாஹ்வினால்) நிராகரிக்கப்பட்டு விடும்’ (புஹாரி, முஸ்லிம்). மேலும் நபியவர்கள் கூறினார்கள்: ‘நமது இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யார் புதிதாக உருவாக்குகிறாரோ அது (அல்லாஹ்வினால்) நிராகரிக்கப்பட்டு விடும்’ (முஸ்லிம்).

ஏதாவது ஒரு செயலை மார்க்கத்தில் புதிதாக உருவாக்கி விட்டு இது நல்ல காரியம்தானே என்றுதான் பெரும்பாலானோர் நினைக்கிறார்கள். அவ்வாறல்ல. ஒரு முஸ்லிமின் பார்வை அவ்வாறு அமையக் கூடாது. அல்லாஹ்வும் அவனது தூதரும் இதை கூறியிருக்கிறார்களா என்ற பார்வைதான் முதலில் வர வேண்டும். ஏனெனில் நமது பார்வைகளும் சிந்தனைகளும் குறைபாடுள்ளவை, பலவீனமானவை.

அது மட்டுமல்ல, அல்லாஹ்வோ, நபியவர்களோ சொல்லாத, செய்யாத ஒன்றை நாமாக உருவாக்கி விட்டு அதை நல்லதென்று கருதுகிறோம் எனில், அல்லாஹ்வுக்கும் நபியவர்களுக்கும் நல்ல காரியமொன்று தெரியாமற் போய் விட்டது என்று அர்த்தமாகி விடும். அல்லது நல்ல காரியமொன்றை நபியவர்கள் சொல்லாமல் மறைத்து விட்டார்கள் என்று அர்த்தமாகி விடும். நஊது பில்லாஹ்.

இதனைத்தான் இமாம் மாலிக் றஹிமஹுல்லாஹ் அவர்கள், ‘இஸ்லாத்தில் இல்லாத ஒரு காரியத்தை புதிதாக உருவாக்கி விட்டு அதை நல்ல காரியமென்று யார் கருதுகிறாரோ அவர், நபியவர்கள் தனது நபித்துவத்தில் மோசடி செய்து விட்டார்கள் (ஒரு நல்ல காரியத்தை நபியவர்கள் சொல்லாமல் மறைத்து விட்டார்கள்) என்று கருதுகிறார். ஏனெனில் அல்லாஹ் இந்த மார்க்கத்தை நபியவர்களின் மரணத்தோடு பூரணப்படுத்தி விட்டதாக கூறுகிறான். எனவே அன்று மார்க்கமாக இல்லாத ஒரு விடயம் இன்றும் மார்க்கமாக இருக்க முடியாது’ என்று மிக அருமையாக விவரிக்கிறார்கள் (நூல் : அல்இ.்.திஸாம்).

இஸ்லாம் மார்க்கத்தின் உரிமையாளன் அல்லாஹ் மட்டுமேயாவான். இந்த மார்க்கத்தில் சட்ட திட்டங்களை, வணக்க வழிபாடுகளை உருவாக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. இதனைத்தான் அல்லாஹ் அல்குர்ஆனில், ‘அறிந்துகொள்ளுங்கள், தூய்மையான இந்த மார்க்கம் அல்லாஹ்வுக்குரியது’ (39:3) என்று குறிப்பிடுகிறான். அல்லாஹ் அறிவித்துக் கொடுத்ததைத்தான் நபியவர்கள் நமக்கு வணக்க வழிபாடுகளாக அறிமுகப்படுத்தினார்களேயன்றி நபியவர்களுக்கு கூட மார்க்கத்தில் தனது விருப்பப்பிரகாரம் ஏதாவது ஒன்றை அறிமுகப்படுத்தும் அதிகாரத்தை அல்லாஹ் வழங்கவில்லை. இதனைத்தான் அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான்: ‘நபியவர்கள் தனக்கு வஹியாக அறிவிக்கப்படுவதைத் தவிர தனது மனோ இச்சைப் பிரகாரம் எந்தவொன்றையும் பேசுவதில்லை’(53 : 3, 4).

அல்லாஹ் அறிவித்துக் கொடுத்ததை சமூகத்துக்கு எத்திவைக்கும் பணியைத்தான் நபியவர்கள் மேற்கொண்டார்கள். இதனால்தான் அல்லாஹ் நபியைப் பார்த்து பின்வரும் வசனங்களில் ஆணித்தரமாக குறிப்பிடுகிறான்:

‘அல்லாஹ்வின் தூதரே! உம்முடைய இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டிருப்பதை எத்திவைப்பீராக’(5:67)
‘தெளிவாக எத்தி வைப்பதைத் தவிர உம் மீது வேறு எந்தக் கடமையும் இல்லை’ (24 : 54)

எனவே வணக்க வழிபாடுகளை, சட்ட திட்டங்களை உருவாக்கும் அதிகாரம் அல்லாஹ்வுக்கு மட்டும் உரியது. அவற்றை சமூகத்திடம் எத்தி வைக்கும் பணி நபியவர்களுக்குரியது. அவற்றை ஏற்று பின்பற்றும் கடமை அந்த நபியின் சமூகமாகிய நமக்குரியதாகும்.

இந்த அடிப்படை எதார்த்தத்தை மிக நுணுக்கமாக புரிந்துகொண்டோம் எனில், மார்க்கத்தில் புதிதாக எந்த ஒன்றையும் உட்புகுத்துவதற்கு நாம் துணியவும் மாட்டோம், அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட விடயத்தை நல்ல காரியம்தானே என்று கூறவும் மாட்டோம்.

ஆனால் சமூகத்திலுள்ள பலர் அல்லாஹ்வுக்குரிய அதிகாரத்தை - நபியவர்களுக்கே இல்லாத சட்டமியற்றும் அதிகாரத்தை- தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டார்கள். அவர்கள் விரும்பியதை எல்லாம் மார்க்கம் என்று செயற்படுத்துகிறார்கள். அல்லாஹ்வின் அதிகாரத்தை கைகளில் எடுத்துக்கொள்வது எத்தனை பெரிய ஆபத்தானது என்பதை புரிவதற்கு தவறி விடுகிறார்கள்.

இவ்வகையில் அல்லாஹ்வோ, நபியவர்களோ நமக்கு காட்டித் தராத ஒரு நடைமுறைதான் ஐவேளைத் தொழுகைகள், ஜும்ஆத் தொழுகை, பெருநாள் தொழுகை, ஜனாஸாத் தொழுகை ஆகியவற்றுக்குப் பின்னரும் ஏனைய சில சந்தர்ப்பங்களிலும் ஒருவர் துஆ ஓத மற்றவர்கள் ஆமீன் கூறுகின்ற கூட்டு துஆ என்ற நடைமுறையாகும்.

## ஐவேளைத் தொழுகைகளில் ஸலாம் கொடுத்த பின் நபியவர்களின் நடைமுறை

ஐவேளைத் தொழுகைகளில் ஸலாம் கொடுத்த பின் நபியவர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்கள் என்பதை அறிந்து கொண்டால், சமூகத்தில் காணப்படும் பிழையான நடைமுறைகளை இனங்கண்டுகொள்ள முடியும்.

1. நபியவர்கள் தொழுகை முடிந்ததும் ம.்.மூம்களை நோக்கித் திரும்புவார்கள் (ஆதாரம் : புஹாரி)

2. அல்லாஹுஅக்பர் என்று கூறுவார்கள் (ஆதாரம் : முஸ்லிம்)

3. அஸ்தக்பிருல்லாஹ் என்று மூன்று முறை கூறுவார்கள் (ஆதாரம் : முஸ்லிம், திர்மிதி)

4. அல்லாஹும்ம அன்தஸ் ஸலாம் வமின்கஸ் ஸலாம் தபாரக்த யாதல் ஜலாலி வல்இக்ராம் என்று கூறுவார்கள் (ஆதாரம் : முஸ்லிம், திர்மிதி)

5. லாஇலாஹ இல்லல்லாஹுவஹ்தஹுலாஷரீக லஹுலஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுரல்லி ஷைஇன் கதீர், அல்லாஹும்ம லா மானிஅ லிமா அ.்.தய்த வலா மு.்.திய லிமா மன.்.த வலா யன்பஉ தல் ஜத்தி மின்கல் ஜத்து என்று கூறுவார்கள் (ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்)

6. ஸுப்ஹானல்லாஹ் 33 தடவை, அல்ஹம்து லில்லாஹ் 33 தடவை, அல்லாஹுஅக்பர் 33 அல்லது 34 தடவைகள் ஓதிவிட்டு பின்னர் லாஇலாஹ இல்லல்லாஹுவஹ்தஹு, லஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலா குல்லி ஷைஇன் கதீர் என்று ஒரு தடவையும் கூறுவார்கள் (புஹாரி, இப்னுமாஜஹ், திர்மிதி).

7. ஆயதுல் குர்ஸி ஓதுவார்கள் (நஸாஈ).

8. ஸூரதுல் இக்லாஸ், ஸூரதுல் பலக், ஸூரதுந் நாஸ் ஆகிய மூன்று ஸூறாக்களை ஓதுவார்கள் (திர்மிதி).

9. அல்லாஹும்ம அஇன்னீ அலா திக்ரிக வஷுக்ரிக வஹுஸ்னி இபாததிக (நஸாஈ, அஹ்மத்)

10. ம.்.ரிப், ஸுப்ஹ் தொழுகைகளுக்குப் பின் லாஇலாஹ இல்லல்லாஹுவஹ்தஹுலாஷரீக லஹுலஹுல் முல்கு வலஹுல் ஹம்து வஹுவ அலாகுரல்லி ஷைஇன் கதீர் என்று 10 தடவை கூறுவார்கள் (அஹ்மத்)

மேற்குறிப்பிட்ட பல திக்ருகளையும் துஆக்களையும் இன்னும் பல துஆக்களையும் நபியவர்கள் தனியாக செய்துள்ளார்கள். இவற்றை நபிகளார் கூட்டாகச் செய்ததற்கு ஏற்கக்கூடிய எந்த ஆதாரங்களும் இல்லை. அத்துடன் அவர்கள் கேட்ட துஆக்களின் நடை என்னை... எனக்கு என்று அமைந்திருப்பதால் தனியேதான் செய்தார்கள் என்பது மேலும் வலுவாகிறது.

இது தவிர நபியவர்கள் கூட்டாக துஆ செய்திருக்கிறார்கள் என்பதற்கு சிலர் சில ஆதாரங்களை முன்வைக்கிறார்கள். அவை உண்மையில் கூட்டு துஆவுக்கான ஆதாரங்களா, அவை ஆதாரபூர்வமானவையா என்பதை இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் நோக்கலாம்.

# இறுதிப் பயணம் மறுமை - 06

-அஷ்ஷெய்க் MIM. வபா (கபூரி)

18. மூன்றாம் தக்பீரின் பின்னால் ஓதவேண்டிய ஸுன்னத்தான சிறிய துஆ நபியவர்கள் ஓதிய துஆ எவராலும் இலகுவாக மனனம்செய்ய முடியுமான ஒரு துஆ. இதன் பொருளை கவனித்த இதை அறிவிப்புச் செய்யும் ஸஹாபி அபூ அப்திர் றஹ்மான் இப்னு அவ்பு றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் 'இந்த துஆவுக்குரிய மையித்தாக நான் இருந்திருக்க வேண்டுமே!' என்று ஆசைப்படுகின்றார் என்றால் இந்த துஆவின் பெறுமதி தெரியவரும். ஆகவே நாம் இதனை மனனம் செய்து நாம் கலந்து கொள்ளும் ஜனாஸாத் தொழுகைகளில் ஓதி வரவேண்டும். இதனால் நமக்கும் பயன் கிடைப்பதோடு நபியுடைய ஸுன்னத்தும் ஹயாத்தாகும்.

اللَّهُمَّ اغْفِرْ لَهُ ، وارْحمْهُ ، وعافِهِ ، واعْفُ عنْهُ وَأَكرِمْ نزُلَهُ ، وَوسِّعْ مُدْخَلَهُ واغْسِلْهُ بِالماءِ والثَّلْج والْبرَدِ ، ونَقِّه منَ الخَطَايَا، كما نَقَّيْتَ الثَّوبَ الأَبْيَضَ منَ الدَّنَس ، وَأَبْدِلْهُ دارا خيراً مِنْ دارِه وَأَهْلاً خيّراً منْ أَهْلِهِ، وزَوْجاً خَيْراً منْ زَوْجِهِ وأدْخِلْه الجَنَّةَ ، وَأَعِذْه منْ عَذَابِ القَبْرِ ، وَمِنْ عَذَابِ النَّار

இந்த துஆவை எல்லோரும் சிரமம் பாராது முயன்று மனனம் செய்துகொள்வோம்.

யாஅல்லாஹ் அவரது பிழையைப் பொறுப்பாயாக. அவருக்கு அருள்புரிவாயாக. அவரை மன்னிப்பாயாக பாவங்களை விட்டும் அவரைத் தடுப்பாயாக. அவரது தங்குமிடத்தை கண்ணியமானதாக ஆக்குவாயாக. அவர் நுளையுமிடத்தை விசாலமானதாக ஆக்குவாயாக. இன்னும் அவரை தண்ணீரினாலும் பனிக்கட்டியினாலும் கழுவுவாயாக. வெள்ளைத் துணி அழுக்குகளிலிருந்து தூய்மைப்படுத்தப்படுவது போன்று அவரது தவறுகளிலிருந்து அவரைத் தூய்மைப்படுத்துவாயாக. இன்னும் இந்த உலகில்அவருக்கிருந்த வீட்டைவிட சிறந்த வீட்டை அவருக்கு கொடுப்பாயாக. இன்னும் அவரது குடும்பத்தாரை விட சிறந்த குடும்பத்தைக் கொடுப்பாயாக. இன்னும் அவரது மனைவியைவிட சிறந்த மனைவியைக் கொடுப்பாயாக. இன்னும் அவரை சுவர்க்கத்தில் நுளையச்செய்வாயாக. இன்னும் அவரை கப்றுடைய வேதனையிலிருந்து பாதுகாப்பாயாக. இன்னும் அவரை நரகிலிருந்தும் பாதுகாப்பாயாக. (நூல்: முஸ்லிம்)

19- நான்காம் தக்பீரின் பின்னர் நபி ஸல்லல்லாஹுஅலைஹி வஸல்லம் அவர்கள் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு நபியவர்கள் ஸலாம் சொல்வார்கள். சில சந்தர்ப்பங்களில் ஒரே ஒரு ஸலாம் மட்டும் சொல்லியுள்ளார்கள். இத்துடன் இத்தொழுகை முடிந்துவிடும்.

20- அதன் பிறகு பாத்திஹா ஓதவோ, துஆ ஓதவோ, ஸலவாத்து சொல்லவோ நபியவர்கள் கூறவுமில்லை, செய்துகாட்டவுமில்லை. உடனேயே அடக்கம் செய்ய வேண்டியதுதான் கடமை.

21-அடக்கம் முடிந்தவுடன் அங்கே இருப்பவர்களைப்பார்த்து உங்கள் சகோதரர்க்கு ம.்.பிறத்துக்காக பாவமன்னிப்புக்காக கேளுங்கள் என்று சொல்வார்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக அவருக்காக துஆசெய்வார்கள். அங்கே தல்கீன் என்று ஒன்றும் நபியவர்கள் ஓதவுமில்லை, ஓதச்சொல்லவுமில்லை. கபுரில் காட்டுப் பற்றைகளையோ, பூமரங்களையோ வேறு எதையுமோ நட்டதுமில்லை.

- இன்ஷா அல்லாஹ் தொடரும்

# ஐயமும் தெளிவும்

**ஐயம்** : பெண்கள் முகம் மூடுவது அவசியமா?

- AM. **ஆதில் ஹஸன், ஐயங்கேணி, ஏறாவூர் 03**

**தெளிவு**: பெண்கள் தமது முகத்தையும் இரு மணிக்கட்டுக் கைகளையும் மூடுவது தொடர்பில் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் இரு வேறுபட்ட கருத்துகள் காணப்படுகின்றன.

**முதலாம் வகையினர்:** பெண்களின் முழு உடலும் அவ்றத் என்றும், எனவே ஒரு பெண் அஜ்னபியான ஆண்கள் முன்னிலையில் தனது முகம், இரு மணிக்கட்டுக் கைகள் உட்பட உடலின் அனைத்துப் பகுதிகளையும் மூடியிருப்பது வாஜிப் என்றும் குறிப்பிடுகின்றனர்.

**இரண்டாம் வகையினர்:** பெண்கள் அஜ்னபியான ஆண்கள் முன்னிலையில் தமது முகத்தையும் இரு மணிக்கட்டுக் கைகளையும் மூடுவது வாஜிப் அல்ல, ஆயினும் அது ஸுன்னத்தான காரியம் என்றும் முகத்தையும் இரு மணிக்கட்டுக் கைகளையும் தவிரவுள்ள ஏனைய பகுதிகள் அனைத்தையும் - இரு பாதங்கள் உட்பட- மூடுவது கடமை என்றும் குறிப்பிடுகின்றனர்.

மற்றுமொரு சாரார் முகத்தையும் இரு மணிக்கட்டுக் கைகளையும் மூடுவது வாஜிபும் அல்ல, ஸுன்னத்தும் அல்ல, அது அன்றைய கால சாதாரண வழக்கமாகவே இருந்தது என்று குறிப்பிடுகின்றனர். ஆயினும் அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களை வைத்து நோக்கும் போது இக்கருத்து தவறானதாகும்.

அதே நேரம் பெண்கள் தமது முகத்தையும் இரு மணிக்கட்டுக் கைகளையும் தவிரவுள்ள ஏனைய அனைத்து உறுப்புகளையும் - இரு காதுகள், தலைமுடி, இரு பாதங்கள், கழுத்து ஆகியவை உட்பட- மறைக்க வேண்டியது வாஜிப் என்பதில் அனைத்து இஸ்லாமிய அறிஞர்களும் உடன்படுகின்றனர் என்பது கவனத்திற்கொள்ளத் தக்கதாகும்.

முகத்தையும் இரு கைகளையும் மூடுவது வாஜிப் என்று கூறும் அறிஞர்கள் முன்வைக்கும் ஆதாரங்கள் சிலவற்றை நோக்குவோம்:

**1.** அல்லாஹ் அல்குர்ஆனில் கூறுகிறான்: 'நபியே மு'மினான பெண்களுக்கு நீர் கூறுவீராக! தங்கள் பார்வைகளை அவர்கள் தாழ்த்திக்கொள்ளவும், தங்கள் மறைவிடங்களைப் பேணிப்பாதுகாத்துக்கொள்ளவும், வெளியில் தெரியக்கூடியவற்றைத் தவிர தங்கள் அலங்காரத்தை அவர்கள் வெளிப்படுத்த வேண்டாம்' (24:31). இவ்வசனத்தில் அல்லாஹ் பெண்கள் அஜ்னபியான ஆண்கள் முன்னிலையில் தமது அலங்காரத்தை வெளிப்படுத்த வேண்டாம் எனக் குறிப்பிடுகிறான். 'வெளிப்படையாகத் தெரிபவற்றைத் தவிர' என்று இவ்வசனத்தில் குறிப்பிடப்படுவது பெண்கள் அணியும் ஆடை, அணிகலன்கள் போன்றவற்றைக் குறிப்பிடுகிறது என்றும், எனவே ஆடை, அணிகலன்கள் போன்றவற்றறைத் தவிர மற்ற அனைத்தையும் மறைப்பது கடமை என்று முதலாம் வகையினர் குறிப்பிடுகின்றனர்.

**2.** ஆஇஷா றழியல்லாஹுஅன்ஹா அவர்கள் அறிவிக்கிறார்கள்: இஹ்றாம் ஆடை அணிந்த நிலையில் நாங்கள் நபியவர்களுடன் நின்றுகொண்டிருக்கும் போது ஆண்கள் எங்களை நோக்கி வருவதைக் கண்டால் நாங்கள் முகத்தை மூடிக்கொள்வோம். அவர்கள் எங்களை கடந்துசென்று விட்டால் முகத்திரையை நீக்கிவிடுவோம் (அஹ்மத், அபூதாவூத்).

**3.** அஸ்மா றழியல்லாஹுஅன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: அந்நிய ஆண்கள் முன்னிலையில் நாங்கள் முகத்தை மறைப்பவர்களாக இருந்தோம் (ஹாகிம்).

இவை போன்று இன்னும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன. இவற்றின் அடிப்படையில் முகத்தை மறைப்பது கடமை என்று முதல் வகையினர் குறிப்பிடுகின்றனர்.

இதே வேளை முகத்தை மறைப்பது ஸுன்னத்தான காரியம் என்று கூறுவோர் பின்வரும் ஆதாரங்களை முன்வைக்கின்றனர்:

**1.** நபியவர்கள் ஒரு தடவை பெருநாள் தொழுகையை மைதானத்திலே தொழுவித்து ஆண்களுக்கு உரையாற்றி விட்டு பின்னர் பெண்கள் பக்கமாகச் சென்று அவர்களுக்கும் உரையாற்றினார்கள். அப்போது ஒரு பெண்மணி நபியவர்களிடம் கேள்வி கேட்டார். அப்பெண்மணியின் இரு கன்னங்களிலும் கருப்பு நிறம் காணப்பட்டது என்று இந்த ஹதீஸை அறிவிக்கும் ஜாபிர் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் கூறுகிறார்கள்: (ஹதீஸின் சுருக்கம் - ஆதாரம் : முஸ்லிம், நஸாஈ). இந்த ஹதீஸில் அப்பெண்ணின் கன்னம் பற்றி விபரிக்கப்படுவதால் அப் பெண் முகத்தை மூடியிருக்கவில்லை என்பது தெளிவாகிறது. முகத்தை மூடுவது கடமையாக இருந்திருந்தால் அப்பெண் முகத்தை மூடியிருந்திருப்பார். அல்லது நபியவர்கள் முகத்தை மூடுமாறு பணித்திருப்பார்கள். அதே நேரம் இச்சம்பவம் ஹிஜாப் பற்றிய சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட பின் நடைபெற்ற சம்பவம் என்பதும் கவனிக்கத்தக்கதாகும்.

**2.** ஸுபைஆ றழியல்லாஹுஅன்ஹா அவர்களின் கணவர் ஸஃத் றழியல்லாஹுஅன்ஹுஅவர்கள் ஹஜ்ஜதுல் வதாஇலே மரணித்துவிட்டார். அதற்காக ஸுபைஆ அவர்கள் இத்தா அனுஷ்டித்து முடித்த பின் அவரை திருமணம் பேசுவதற்காக அபுஸ் ஸனாபில் என்ற ஸஹாபி ஸுபைஆ அவர்களின் வீட்டுக்கு வந்து திருமணம் பேசிய போது அதை அப்பெண்மணி மறுத்துவிட்டார்கள். அந்த வேளை அப்பெண்மணி இரு கைகளுக்கும் மருதாணி இட்டும் கண்களுக்கு சுறுமா இட்டும் இருந்தார்கள் (அஹ்மத்). இந்த ஹதீஸிலே ஸுபைஆ றழியல்லாஹுஅன்ஹா அவர்கள் இரு மணிக்கட்டுக் கைகளையும் மறைத்திருக்கவில்லை என்பது தெளிவாகிறது. அதனால்தான் திருமணம் பேச வந்த ஸஹாபி கையில் மருதாணி இட்டிருப்பதை அவதானித்தார்கள்.

**3.** நபியவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது பழ்ல் இப்னு அப்பாஸ் அவர்கள் நபியவர்களின் ஒட்டகத்திலே நபிக்குப் பின்னால் அமர்ந்திருந்தார்கள். அப்போது (ஹஜ்ஜுக்காக வந்த) ஹஸ்அம் கோத்திரத்தைச் சேர்ந்த ஓர் அழகிய பெண்மணி ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தன்று நபியவர்களிடம் மார்க்கத் தீர்ப்புக் கேட்க வந்த போது பின்னால் இருந்த பழ்ல் இப்னு அப்பாஸ் அவர்கள் அப்பெண்மணியை திரும்பிப் பார்த்தார்கள். அப்பெண்மணியும் அவரைப் பார்த்தார். இதை அவதானித்த நபியவர்கள் பழ்ல் அவர்களின் முகத்தை வேறு பக்கம் திருப்பிவிட்டார்கள் ( ஹதீஸின் சுருக்கம் - ஆதாரம் : புஹாரி, முஸ்லிம்). இந்த ஹதீஸிலே இடம்பெறும் பெண்மணி முகம் திறந்திருந்தமையால்தான் அழகிய பெண் என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறார் என்பது தெளிவாகிறது. ஹஜ்ஜுக் காலத்தில் இஹ்றாம் அணிந்திருப்பவர்கள் முகத்தை மறைக்கக்கூடாது என்பதால் இப்பெண் முகத்தை திறந்திருக்கலாம் என்று சிலர் எண்ணக்கூடும். ஆனால் இச்சம்பவம் நடைபெற்றது ஹஜ்ஜுப் பெருநாள் தினத்தில் என்று ஹதீஸிலே தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. ஹஜ்ஜுப் பெருநாள் தினம் என்பது இஹ்றாம் உடையைக் கழற்றிவிட்டு சாதாரண ஆடைகள் அணிந்திருக்கும் காலமாகும் என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இதனால்தான் இமாம் குர்துபி, இமாம் தபரி போன்ற மற்றும் பல பிரபல தப்ஸீர் கலை அறிஞர்கள் '(மு'மினான

பெண்கள்) வெளிப்படையாகத் தெரிபவற்றைத் தவிர தமது அலங்காரத்தை வெளிப்படுத்த வேண்டாம்' (24 : 31) என்ற அல்குர்ஆன் வசனத்திற்கு விளக்கமளிக்கும் போது 'வெளிப்படையாகத் தெரிபவற்றைத் தவிர' என்பது முகம், இரு மணிக்கட்டுக் கைகள் என்பவற்றைக் குறிக்கிறது என்று குறிப்பிடுகிறார்கள்.

இவை போன்று இன்னும் பல ஹதீஸ்கள் அன்றைய கால ஸஹாபிப் பெண்கள் பலர் அந்நிய ஆண்கள் முன்னிலையில் தமது முகம், இரு மணிக்கட்டுக் கைகளை திறந்திருந்தமைக்கு ஆதாரமாக இருக்கின்றன. முகம் மூடுவது வாஜிப் என்றிருந்தால் நிச்சயமாக அவர்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முகத்தை மறைத்திருப்பார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை செயற்படுத்துவதிலும் நன்மைகளைச் சம்பாதிப்பதிலும் இக்காலப் பெண்களை விட பன்மடங்கு முன்னிலையில் திகழ்ந்த ஸஹாபிப் பெண்கள் பலர் அந்நிய ஆண்கள் முன்னிலையில் தமது முகம், இரு மணிக்கட்டுக் கைகளைத் திறந்திருந்திருக்கிறார்கள் எனில், அவற்றை மறைப்பது ஸுன்னத் என்ற முடிவுக்கே வர முடிகிறது. அல்லாஹ் மிகவும் அறிந்தவன்.

எனவே, இந்த ஸுன்னத்தான காரியத்தை பேணி நடக்க விரும்பும் பெண்கள் அல்லாஹ்வுக்காக என்ற தூய எண்ணத்தோடு அதைப் பேணி வருவது அவசியமாகும். ஏனெனில் முகத்தை மூடும் பெண்களில் ஒரு சிலர் தவறான நடத்தைகளில் ஈடுபடுவதற்கான ஒரு கவசமாக தமது முகத்திரையைப் பயன்படுத்திக்கொள்வதை நமது பிரதேசங்களிலும் ஏன் அறபு நாடுகளிலும் கூட அவதானிக்க முடிகிறது. இத்தகையோர் தம்மை யாரும் அடையாளம் காணவில்லை என்று கருதிக்கொண்டாலும் அனைத்தையும் படைத்த அல்லாஹ் இவர்களையும் இவர்களது துர்நடத்தைகளையும் அவதானித்துக்கொண்டே இருக்கிறான் என்பதை மறந்துவிடக் கூடாது.

முகத்தை மூடுவது ஸுன்னத் என்ற வகையில், முகத்தை மூடுவதும் மூடாமல் இருப்பதும் அவரவர் விருப்பத்தைப் பொறுத்ததாகும். முகம் மூடும் பெண்களை கிண்டல் செய்வதும் இழிவாக நோக்குவதும் குற்றமாகும். அவ்வாறே முகம் மூடாதிருக்கும் பெண்களை குற்றமிழைத்தவர்கள் போன்று நோக்குவதும் தவறானதாகும். இவ்விடயத்தில் விட்டுக்கொடுப்போடும் புரிந்துணர்வோடும் நடந்துகொள்வது அவசியமாகும்.

அதே நேரம் ஊரில் இருக்கும் போது மிகப் பக்குவமாகவும் இஸ்லாமிய ஹிஜாபைப் பேணியும் நடக்கும் பெண்கள் பலர் சுற்றுலாப் பயணங்கள், திருமணங்கள், வைபவங்கள் என்று வந்துவிட்டால் தங்களது ஹிஜாபுக்கு விடுமுறை கொடுத்து விட்டு இஸ்லாம் ஹறாமாக்கிய முறையில் ஆடை அணிந்துகொள்வதையும் அவதானிக்க முடிகிறது. இது இரட்டை வேடம் போடுகின்ற முனாபிக்குகளின் பண்பாகும். இத்தகைய பெண்கள் அல்லாஹ்வைப் பயந்துகொள்ள வேண்டும். இரட்டை வேடம் போடுவது அல்லாஹ்வின் கோபத்தை சம்பாதிக்கும் செயலாகும்.

இதே வேளை இன்றைய பெண்களில் பலர் அணியும் அபாயா, ஹிஜாப் என்ற பெயரிலான ஆடைகளும் சாரி, சல்வார் போன்ற பாரம்பரிய ஆடைகளும் இஸ்லாமிய வரையறைகளுக்கு முற்றிலும் அப்பாற்பட்டவையாக இருப்பதை இங்கு சுட்டிக்காட்டாமலிருக்க முடியாது. ஆண்கள் பலர் தவறான நடத்தைகளுக்கு இட்டுச்செல்லப்படுவதற்கு இத்தகைய ஆடைகளும் ஒரு காரணம் என்பதில் சற்றும் ஐயமில்லை. எனவே பெண்களின் ஆடைகள் பின்வரும் வரையறைகளுக்குட்பட்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

1. உடலின் அனைத்துப் பாகங்களையும் - குறிப்பாக தலைமுடி, காதுகள், கழுத்து, பாதங்கள் ஆகியவற்றையும் மறைக்கக் கூடியதாக - வெளிப்படுத்துவதாயின் முகத்தையும் இரு மணிக்கட்டுக் கைகளையும் மாத்திரம் வெளிப்படுத்தக் கூடிய ஆடைகளாக இருக்க வேண்டும். பல பெண்கள் தமது தலைமுடி, காதுகள், கழுத்து, பாதங்கள் என்பன வெளித்தெரியும் விதமாக ஆடைகளை அணிவது ஹறாமான, பாவமான செயல் என்பதை அத்தகையோர் உணர வேண்டும். நபியவர்கள் கூறினார்கள்: 'ஆடை அணிந்தும் நிர்வாணமாக காட்சிதரும் பெண்கள் நரகவாதிகளாவர். அவர்களது தலைகள் ஒட்டகத்தின் திமில்களைப் போன்றிருக்கும். இத்தகையோர் சுவனம் நுழையமாட்டார்கள், அதன் வாடையைக் கூட முகரமாட்டார்கள்' (முஸ்லிம், அஹ்மத்).

2. அணியும் ஆடைகள் இறுக்கமானவையாகவோ, மெல்லியதாகவோ இருக்கக் கூடாது.
3. ஆண்கள் அணியும் ஆடைகளுக்கு ஒப்பானவையாக இருக்கக் கூடாது.
4. பிறருக்கு வாசனை வீசும் அளவுக்கு வாசனைத் திரவியங்களை உடலிலோ, உடையிலோ பூசிக்கொள்ளக் கூடாது. நபிகளார் கூறினார்கள்: 'எந்தப் பெண்ணேனும் பிறருக்கு வாசனை வீசும் அளவுக்கு மணம் பூசிக்கொண்டு ஒரு கூட்டத்தை கடந்துசென்றால் அப்பெண் ஒரு விபசாரியாவாள்' (அஹ்மத், திர்மிதி).

முஸ்லிம் சமூகம் உச்ச நிலையை அடைவதற்கு உரமாக இருந்து செயற்பட்ட ஸஹாபிப் பெண்களை நமது பெண்கள் முன்மாதிரிகளாகக் கொண்டு வாழ்வதற்கு அல்லாஹ் அருள்புரிவானாக.


மாதம் தோறும் புத்தகப்பரிசை வழங்குவோர்:

ஏறாவூர் மணிக்கூட்டுக் கோபுர
சந்தியில் அமைந்துள்ள
யூரோ போன் வேர்ல்ட்
இல.17, பிரதான வீதி, ஏறாவூர்
Fax: 065 2240283

டயலொக் மாதாந்த கட்டணப் பட்டியல் (Dialog Bill)
இங்கே செலுத்த முடியும்.

மட்டக்களப்பு - கொழும்பு சொகுசு பஸ் சேவை
(குளிரூட்டப்பட்ட) ஆசனம் இங்கு பதிவு செய்யப்படும்.

CGS
இனாஸ் கட்டடம்
(ஜாமிஉல் அக்பர் பள்ளிவாயல் அருகாமையில்)
2வது மாடி, காட்டுப்பள்ளி வீதி, ஏறாவூர்.
தொ.பே : 0772300420, 0759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணனி திருத்துவது
சம்பந்தமான பிரச்சினையா?
சேவைகள்
01. Computer Formatting
02. Backups and Restores
03. Drivers and Updates
04. Software installations
05. Hardware Troubleshooting
06. Any Computer Related Issues
இன்றே அழையுங்கள்
0772300420

ஏறாவூரில்
COMPUTERS
& REPAIRING





அல்ஹாஜ். அப்துல் மஜீத் (அலிமுஹம்மத் ஹாஜியார்) மாவத்தையில் குடியமர்த்தப்பட்டுள்ள வறிய குடும்பங்களுக்கு ஏறாவூர் தவ்ஹீத் ஜமாஅத்தினால் ஐந்து (5) கிணறுகள் வழங்கப்பட்டன. இதன் போது எடுக்கப்பட்ட புகைப்படம்.

அத்தோடு நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான வீடு ஒன்றுக்கான வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

**CGS**
College for Tech Studies
Inash Building (Near Jamiul Akbar Jummah Masjid),
Second Floor, Kadduppalli Road, Eravur
Tel: +94772300420, +94759900421
Email: cgsystem@cgs.lk Web: www.cgs.lk

உங்களது கணனி தகமைகளை **CGS** உடன் இணைந்து பெற்றுக் கொள்வதற்கு இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்

**CGS இன் கணனி கற்கை நெறிகள்**

* Diploma in Personal Computer Based Application Packages
* Diploma in Computer Hardware
* Diploma in Computer Networking & Administration
* Professional Diploma in AutoCAD, MEP and Architecture
* Computer for Kids

தனிப்பட்ட மற்றும் குழு வகுப்புகள் அவரவர் தேவைக்கேற்ப ஒழுங்கு செய்து கற்பிக்கப்படும்.

ஒவ்வொரு வாரமும் சனி, மற்றும் ஞாயிறு தினங்களில் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும்.

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள் 0772300420

## பெறுமதியான புத்தகப் பரிசை வென்று தரும் ஐந்து கேள்விகள்

1. வஹி மத்லுவ் என்றால் என்றால் என்ன?
2. புஹாரி மஜ்லிஸில் நடைபெறும் மார்க்கத்துக்கு முரணான ஒரு செயலை குறிப்பிடுக.
3. ஹஜ்ஜதுல் வதாஇன் போது மரணித்த ஸுபைஆ றழியல்லாஹுஅன்ஹா அவர்களின் கணவர் யார்?
4. யூதர்கள் எதற்காக முஸ்லிம்களைப் பார்த்து பொறாமைப்படுவதாக நபியவர்கள் குறிப்பிட்டார்கள்?
5. மார்க்கத்தில் புதிதாக ஒரு செயலை உருவாக்குவது பற்றி நபியவர்கள் எச்சரித்த ஒரு ஹதீஸை குறிப்பிடுக.

இக் கேள்விகளுக்கான விடைகளை இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் **13.06.2012** க்கு முன்னர் எழுதி அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதுவோரில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதியான புத்தகப் பரிசு வழங்கப்படும். ஏனைய ஐவரின் பெயர்கள் அடுத்த இதழில் வெளியிடப்படும். விடைகளை அனுப்பும் போது தொ.பே இலக்கத்தையும் குறித்தனுப்பினால் பரிசில்களை வீடு வந்து சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும். (ஆயினும் அத் தொ. பே இலக்கங்கள் அடுத்த இதழில் வெளியிப்படமாட்டா.) அல்லது தெரிவுசெய்யப்படுவோர் 077 8088030 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். விடைகளை எழுதி அனுப்ப வேண்டிய முகவரி :

**தவ்ஹீத் ஜமாஅத், த.பெ.இல. 02, ஏறாவூர்.**

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான பதில்களை எழுதி வெற்றியாளர்களாக தெரிவு செய்யப்பட்டோர்:

**1ம் இடம் :** MI. **பஸ்ஹானா பர்வீன்,** காதியார் வீதி, ஏறாவூர் 06
**2ம் இடம் :** BM. **றாஷித்,** புன்னைக்குடா வீதி, ஏறாவூர் 03
**3ம் இடம் :** MA. **ஸுமையா,** புன்னைக்குடா வீதி, ஏறாவூர் 03

**பாராட்டைப் பெறும் ஐவர்:**

1. HMF. ஷிபானா, தைக்கா வீதி, ஏறாவூர்
2. ARF. அஸ்மரா, ஜின்னா வீதி, ஐயங்கேணி, ஏறாவூர் 03
3. ACF. றிஷாதா, அஷ்ரப் வீதி, ஏறாவூர் 02
4. HI. றிஸ்னா, ஆலையடி வீதி, ஏறாவூர்
5. N. முஹம்மத் ஷரபி, காயர் வீதி, ஏறாவூர் 2A

### கடந்த மாத இதழில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கான விடைகள் :

1. அவர்களின் பார்வைகளை அல்லாஹ் பறித்துவிடட்டும்
2. மஹ்மூத் அப்பாஸ்
3. மௌனமாக செல்ல வேண்டும்
4. ஸூறா அந் நிஸா
5. அல்குர்ஆன் 54 : 10
6. ஸூறா அல் மாஇதா
7. தம்புள்ள

**மார்க்க விடயங்களையும் தஃவா செய்திகளையும் உங்கள் கையடக்கத் தொலைபேசியில் அறிந்துகொள்ள**
**f evrtj என்று Type செய்து 40404க்கு SMS அனுப்பி வையுங்கள்.**
**இது முற்றிலும் இலவசமானது.**
**(Airtel & Hutch வலையமைப்புகளைத் தவிர)**

### ஐயமும் தெளிவும்

மார்க்கம் தொடர்பான உங்கள் கேள்விகளையும் ஐயங்களையும் எழுதி அனுப்புங்கள். அல்குர்ஆன், ஆதாரபூர்வமான ஹதீஸ்களின் அடிப்படையில் அவற்றுக்கு பதில் அளிக்கப்படும். கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி

தவ்ஹீத் ஜமாஅத்,த.பெ. இல: 02, ஏறாவூர்